[2022 மே 5

முற்பகல் 11–45

(ஈ) நெய்யாறு இடதுகரைக் கால்வாய், ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி மற்றும் கிள்ளியூர் தொகுதி வழியாகப் பயணிக்கும் நெய்யாறு இடதுகரைக் கால்வாயானது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் வெட்டப்பட்ட கால்வாயாகும். நெய்யாற்றங்கரையிலிருந்து தண்ணீர் பெறுவதற்காக வெட்டப்பட்ட அந்தக் கால்வாய் வாயிலாக 9,200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன. ஆனால், தற்பொழுது நிறைய ஆக்கிரமிப்புகள் உள்ளன. மேலும், தூர் வாரப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், கேரளாவிலிருந்து தண்ணீரும் பெறப்படவில்லை. கிட்டத்தட்ட 13, 14 ஆண்டுகளுக்கும் மேலாக தண்ணீர் பெறப்படாத ஒரு சூழ்நிலை உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 32-ன்கீழ் நேரடி மனுவாக முந்தைய ஆட்சியில் வழக்கு தொடரப்பட்டு, தற்போது அந்த வழக்கு சுறுசுறுப்பாக, நல்ல வழக்கறிஞரைக் கொண்டு நடத்தப்பட்டு, நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அந்த அடிப்படையில், அந்த வழக்கை விரைவில் நடத்தி முடிப்பதுடன், தூர் வாருவதற்கும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் நிதி ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும்.*

அதுமட்டுமல்லாமல், நெய்யாறு இடதுகரைக் கால்வாய்ப் பிரச்சினை குறித்து கேரள அரசோடு பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும். குறிப்பாக, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களுடைய தொகுதி சார்பாக அவர்களும் இதுசம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய விளவங்கோடு தொகுதி வழியாகத்தான் இந்தக் கால்வாய் செல்கிறது. எங்களுக்கு மிகப் பெரிய நீர் ஆதாரமே இந்தக் கால்வாய்தான். எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்தான்

2022 மே 5] [திருமதி S. விஜயதரணி]

மேற்கு மாவட்டத்தின் கட்சி செயலாளராகவும் இருக்கிறார்கள். ஆகவே, மக்கள் பிரதிநிதிகளாகிய M.P., M.L.A., ஆகிய எங்கள் எல்லோரையும் இணைத்து ஒரு குழுவை அமைத்து, இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே, எங்களையும் அழைத்துச் சென்று கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமாகப் பேசி தண்ணீரைப் பெறுவதற்கும், உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக வழக்கை நடத்திடவும் நடவடிக்கை எடுக்க அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு பற்றிய வரலாறை நான் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே, நான் பதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், தூர்வார வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். தண்ணீர் வராத கால்வாய்க்குத் தூர் வாரினால் என்ன, தூர் வாராவிட்டால் என்ன, பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

(உ) நாகை மாவட்டம், CPCL நிறுவனம் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு உரிய இழப்பீடு மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள். நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள்? ஒரு வார்த்தையில் கேளுங்கள்.

***திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் பனங்குடி, நரிமணம் ஆகிய 2 ஊர்களில் CPCL company–க்கு 600 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த பனங்குடி மற்றும் நரிமணம் கிராமங்களில் ஏற்கெனவே ONGC–யிலும் நிலம் எடுத்துவிட்டார்கள்; மீன்வளப் பல்கலைக்கழகத்திற்காகவும் நிலம் எடுத்துவிட்டார்கள். இப்போது CPCL நிறுவனத்திற்காக 600 ஏக்கர் நிலம் எடுக்கிறார்கள். ரூ.41,000 கோடி திட்ட மதிப்பீடு. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டார்கள். மாவட்ட நிர்வாகம் என்ன சொல்கிறது